

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.3.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை இராணி மேரி கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் திருமதி ஆ.அமிர்தகௌரி சந்தித்து பேசினார். உடன் அவரது கணவர் பேராசிரியர் மா.செல்வராசன், இங்கிலாந்தில் பணியாற்றும் அவரது மகள் மருத்துவர் செ.வண்ணமலர், அவரது மருமகன் மருத்துவர் சு.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.3.2024) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சரும், திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான டி.பி.எம். மைதீன்கான், அண்மையில் திருமணமான தனது பேத்தி அஃப்சான் நபோரா – ஜவஹர் அலி ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள

# கலைஞர் உலகம் அருங்காட்சியகம்!

## பொதுமக்கள் ஆர்வமுடன் நேற்று பார்வையிட்டனர்!

சென்னை, மார்ச் 7–

சென்னை மெரீனாவில் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில், நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் உலகம் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.



இந்த அருங்காட்சியகத்தை மார்ச் 6 முதல் பொதுமக்கள் பார்வையிட தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது. இந்த நிலையில் இணையம் மூலம் முன்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்ற பொதுமக்கள் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஆர்வமுடன் ரசித்தனர். உள்ளே சென்று திரும்பி வெளியே வர ஒன்றரை மணி நேரம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

7D தொழில்நுட்பத்தில் சென்னை - மன்னை விரைவு வண்டி பயணம், கலைஞர் புகைப்படங்கள், கலை அறிஞர் கலைஞர் என்ற தலைப்பில் குறும்படம் என அருங்காட்சியகம் முழுவதும் நவீன தொழில்நுட்பங்களால் வடிவமைக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை காலை 9 மணி முதல் இரவு 8 மணிக்குள் பார்வையிட அனுமதி வழங்கப்படும் என்றும், பொதுமக்கள் தங்களுக்கு வசதியான காட்சி நேரத்தைத் தேர்வு செய்து முன்கூட்டியே அனுமதிச் சீட்டினை கட்டணமில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் என தமிழ் நாடு அரசு தெரிவித்துள்ளது.

ஒருவர் ஒரு அலைபேசி எண் மூலம் அதிகபட்சமாக 5 அனுமதிச் சீட்டுகள் வரை பெற்றுக் கொள்ள இயலும் என்றும் தமிழ்நாடு அரசு கூறியுள்ளது.

### பா.ஜ.க.,வுக்கு ஆதரவாக செயல்படுவதற்கு கடும் கண்டனம்

# எஸ்.பி.ஐ. வங்கியைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடு முழுவதும் எஸ்.பி.ஐ., கிளைகளை முற்றுகையிட்டு முழக்கம்!

சென்னை, மார்ச் 7-

தேர்தல் பத்திரங்கள் விவகாரத்தில் பா.ஜ.க., வின் ஊழலுக்கு துணைப் போகும் எஸ்.பி.ஐ., வங்கியைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள அந்த வங்கியின் கிளைகளை முற்றுகை யிட்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் பத்திரம் விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு ஆதரவாக செயல்படுவதாக பாரத ஸ்டேட் வங்கிக்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன. இந்நிலையில், இவ் வங்கிக்கு எதிராக அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை அறிவித்து நடத்தி வருகின்றன. அந்தவகையில், எஸ்.பி.ஐ., வங்கியைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.பி.ஐ., மண்டல அலுவலகம் முன்பு அக்கட்சியினர் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராம கிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், அக்கட்சியினர் திரளானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராகவும், பாரத ஸ்டேட் வங்கியைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

### காரைக்குடியில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்றார்!

காரைக்குடி, மார்ச், 7-

கழகத் தலைவரும் முதல்வருமான தளபதி அவர்களின் பிறந்த நாளன்று மார்ச் 1ம் தேதி காரைக்குடி அரசு மருத்துவமனையில் பிறந்த இரண்டு குழந்தைகளுக்கு சமூக ஆர்வலர் செந்தில்நாதன் ஏற்பாட்டின் பேரில் இரண்டு கிராம் தங்க மோதிரங்கள் மற்றும் பழங்கள் குழந்தைகளுக்கான உடைகள் மற்றும் அமைச்சரின் சார்பில் நிதி உதவியினை மாவட்டக் கழக செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் சுப. சின்னத் துரை கே.ஆர்.ஆனந்தநா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், காரைக்குடி நகர்கழக செயலாளர் என்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதாசெந்தில், திருமதிகலாகாசி நாதன், தெரசா, ஒன்றிய கவுன்சிலர் சொக்கலிங்கம், புதுவயல் பேரூர்கழக செயலாளர் பக்ருதீன்அலிபாய், அரசு வழக்கறிஞர் பாலசுப்பிர மணியம், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், அரசுமருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். அதனை தொடர்ந்து 5ம்தேதி மருத்துவமனையில் பிறந்த ஆறு குழந்தைகளுக்கு பழங்கள் மற்றும் நிதி உதவியினை அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார்.


